தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் – 641003

**மாநில அளவிலான உழவர் தின விழா 2024**

**செப்டம்பர் 26, 27, 28 & 29, 2024**

**<u>துணைவேந்தர் - செய்தியாளர் சந்திப்பு</u>**

**நாள் : 24.09.2024** **நேரம்: காலை 10.30 மணி**

**சிறப்பம்சம்: வேளாண்மையில் புதிய பரிணாமம்**

அனைவருக்கும் அன்பான காலை வணக்கம்!

- நாம் அனைவருக்கும் மூன்று வேளை உணவு அளிக்கக்கூடிய உன்னதமான தொழில் விவசாயம் ஆகும்.

- மாறிவரும் கால சூழ்நிலைக்கு ஏற்ப வேளாண்மையில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டிய தருணத்தில் நாம் உள்ளோம்.

- குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், நுண்நீர் பாசனம், திரவ வடிவிலான உரம், தானியங்கி மோட்டார், உயர் அடர் நடவு தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, நுகர்வோருக்கு ஏற்ற சாகுபடி முறைகள், வேளாண்மையை இயந்திரமயமாக்கல், இயற்கை வேளாண்மை. அங்கக வேளாண்மை, நஞ்சில்லா உணவு, பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதி வாய்ப்புகள், வங்கிக் கடன், வேளாண் பயிர் காப்பீடு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், ட்ரோன் தொழில்நுட்பம், நவீன பண்ணை இயந்திரங்கள், மரம் வளர்ப்பு, தொழில் சார்ந்த

வேளாண்மை, வேளாண் தொழில்முனைவோர் மற்றும் டிஜிட்டல் வேளாண்மை போன்ற தொழில்நுட்பங்களை தொகுத்து **வேளாண்மையில் புதிய பரிணாமம்** என்ற தலைப்பில் இந்த உழவர் தின விழா கொண்டாடப்பட உள்ளது.

- இவ்விழாவனது, வருகின்ற ‘செப்டம்பர் 26, 27, 28 மற்றும் 29 ஆகிய நான்கு நாட்களில் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் கண்காட்சி மற்றும் கருத்துக்காட்சி திடல்கள் அமைக்கப்பட்டு, சிறப்பான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் 255 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கில் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மை அறிவியல் நிலையங்கள், வேளாண்மை உழவர் நலத்துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், வேளாண் வாரியங்கள், நபார்டு வங்கி, தொண்டு நிறுவனங்கள், இடுபொருள் விற்பனையாளர்கள், தனியார் நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விரிவாக்கச் சேவை நிறுவனங்கள், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவோர், கால்நடை, மீன்வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் வேளாண் விற்பனை சார்ந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தின் மூலம் இந்த ஆண்டு வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள், தொழில்நுட்பங்கள், மாதிரி ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள், அங்கக வேளாண்மை சாகுபடி உத்திகள், தானியங்கி விவசாய கருவிகள் மற்றும் பண்ணைக் கருவிகளின் மாதிரித் திடல்கள் ஆகியவை

பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பண்ணையில் நேரடி செயல்விளக்கத்துடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

- நவீன வேளாண்மையினை கடைபிடிக்க நான்கு நாட்களுக்கும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் தலா இரண்டு தொழில்நுட்ப கருத்தரங்கம் பல்கலைக்கழக வல்லுநர்கள் மற்றும் சிறந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இச்சிறப்பு மிக்க உழவர் தின விழாவினை மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் எங்களது பல்கலைக்கழக இணைவேந்தர் **திரு. எம். ஆர் .கே. பன்னீர்செல்வம்** அவர்கள் கண்காட்சியை திறந்து வைத்து ஆறு (6) உழவர் பெருமக்களுக்கு வேளாண் செம்மல் விருது வழங்கி உழவர் தின விழாப் பேருரையாற்றவுள்ளார்கள். இந்த விருதினை சி. ஆர். ஐ பம்பு நிறுவனம் நிதியுதவி அளிக்கின்றது.

- மேலும், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் **திரு. சு. முத்துசாமி** அவர்கள் கிராமபுற பெண் வேளாண் தொழில் முனைவோர் மற்றும் இளைஞர் வேளாண் சாதனையாளர் நூல் தொகுப்பு வெளியிட்டு சிறப்புரையாற்ற இசைந்துள்ளார்கள்.

- அதே சமயம், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் **திரு. மு. பெ. சாமிநாதன்** அவர்கள் புதிய பயிர் இரக தொகுப்பினை பத்து (10) விவசாயிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

- உயர் மதிப்பிற்குரிய **செல்வி அபூர்வா, இ.ஆ.ப.,** அவர்கள் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர், வேளாண்மை - உழவர் நலத்துறை அவர்கள் உழவர் தின விழா முன்னிலையுரையாற்றவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்

- வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சகத்தின் அனைத்துத் துறை தலைவர்கள், **முனைவர் ஷேக் நா. மீரா**, இயக்குநர், வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சிக் கழகம், ஐதராபாத், **திரு. இரா. ஆனந்த்**, தலைமை பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை மற்றும் **திரு. டி. ராம் மேகன் ரெட்டி**, துணை பொது மேலாளர், இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், புதுடெல்லி ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளார்கள்.

- கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணைமேயர், மேற்கு மண்டல தலைவர், இந்த பகுதி மாமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

- மேலும், இக்கண்காட்சியை சிறப்பிக்க நபார்டு வங்கி, வேளாண் காப்பீட்டு நிறுவனம், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள், ராசி விதை நிறுவனம், கோரமண்டல் உர நிறுவனம், மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, தமிழ்நாடு காகித தாள் நிறுவனம், தமிழ்நாடு இடுபொருள் விற்பனையாளர் சங்கம், சர்வதேச வேளாண் காடுகள் ஆராய்ச்சி மையம், சக்தி சர்க்கரை ஆலை, SPIC, CRI பம்ப்ஸ் நிறுவனம், GIZ, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம், சேஷசாயி காகித ஆலை மற்றும் போர்டு

லிமிடெட் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியோர் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

- இவ்விழாவின் நிகழ்வுகள், விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் தொழில் முனைவோர்கள், பண்ணை மகளிர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

- எனவே, அனைவரும், செப்டம்பர் 26, 27. 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள இந்த மாநில அளவிலான மாபெரும் உழவர் தின விழாவில் கலந்துக்கொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கிறேன்.

நன்றி……… வணக்கம்.